தமிழ் - تاميلي - 01/18

# முஹம்மது நபி ﷺ யார், அவர்கள் நமக்கு என்ன கற்பித்தார்கள்?

அஷ்ஷெய்க் கலாநிதி ஹைஸம் ஸர்ஹான் அவர்கள் விளக்கக் குறிப்புகளை வழங்கியுள்ளார்கள்

மஸ்ஜிதுன் நபவியில் முன்னாள் ஆசிரியர் மற்றும் ஸுன்னஹ் கல்வியகத்தின் மேற்பார்வையாளர்

பார்கோடை ஸ்கேன் செய்யவும் - **sarhaan.com**

## முஹம்மது நபி ﷺ யார், அவர்கள் நமக்கு என்ன கற்பித்தார்கள்?

- 1400 ஆண்டுகளுக்கு முன்பிருந்தே மனிதகுலத்தின் உரிமைகளைப் பாதுகாத்தவர்கள்.

- அவர்கள் ஆண்கள், பெண்கள், குழந்தைகள் மற்றும் பலவீனமானவர்களின் உரிமைகளைப் பாதுகாத்தார்கள்.

- அவர்கள் விலங்குகள் மற்றும் சுற்றுச்சூழலின் உரிமைகளைப் பாதுகாத்தார்கள் மற்றும் பூமியைப் பராமரிக்க ஆர்வமூட்டினார்கள்.

- நற்குணத்துடன் நடந்துகொள்ள கட்டளையிட்டார்கள். மேலும் உறவினர்கள் மற்றும் அண்டை வீட்டார்களுக்கு இடையே உறவுகளை வளர்த்து ஒழுங்கமைத்தார்கள்.

- முஸ்லிம்களுக்கும் முஸ்லிம் அல்லாதவர்களுக்கும் இடையே சகவாழ்வு உறவை ஏற்படுத்தினார்கள்.

## முஹம்மது நபி ﷺ யார், அவர்கள் நமக்கு என்ன கற்பித்தார்கள்?

- அவர்கள் பெற்றோர்களுக்காக மகத்தான உரிமைகளை உத்தரவாதப்படுத்தும் விதத்தில் அவர்களது பிள்ளைகள் மீது பொறுப்புக்கூறும் கடமைகளை ஏற்படுத்தி குடும்ப உறவுகளை ஒழுங்கமைத்தார்கள்.

- அவர்கள் அடக்குமுறையைத் தடுத்தார்கள், மேலும் நீதி, அன்பு, ஒற்றுமை மற்றும் நல்ல விடயங்களில் ஒத்துழைக்க அழைப்பு விடுத்தார்கள்.

- ஏழைகளுக்கு உதவவும், நோயுற்றவர்களைச் சந்திக்கவும், அனைத்து மனிதர்களுக்கு மத்தியிலும் அன்பு செலுத்தவும், ஒருவருக்கொருவர் நலவு நடுவதற்கும் அவர்கள் அழைப்பு விடுத்தார்கள்.

- திருடுதல், ஏமாற்றுதல், கொலை, அநீதி இழைத்தல் போன்ற மோசமான நடவடிக்கைகளை முஸ்லிம்களுக்கு அவர்கள் தடை செய்தார்கள்.

## முஹம்மது நபி ﷺ யார், அவர்கள் நமக்கு என்ன கற்பித்தார்கள்?

- நிச்சயமாக அவர்கள்தான் நம் வாழ்வையும் நம் கெட்ட இயல்புகளையும் நல்ல நிலைக்கு மாற்றியவர்கள்.

- திருடக்கூடாது என்று முஸ்லிம்களுக்குக் கற்றுக் கொடுத்தார்கள்.

- பொய் சொல்லக்கூடாது என்று முஸ்லிம்களுக்குக் கற்றுக் கொடுத்தார்கள்.

- முஸ்லிம்களுக்கு மது அருந்த வேண்டாம் என்று போதித்தார்கள்.

- விபச்சாரத்தில் ஈடுபட வேண்டாம் என்று முஸ்லிம்களுக்கு போதித்தார்கள்.

- ஏமாற்ற வேண்டாம் என்று முஸ்லிம்களுக்குக் கற்றுக் கொடுத்தார்கள்.

## முஹம்மது நபி ﷺ யார், அவர்கள் நமக்கு என்ன கற்பித்தார்கள்?

- அப்பாவி மக்களுடன் சண்டையிட வேண்டாம் என்று முஸ்லிம்களுக்குக் கற்றுக் கொடுத்தார்கள்.

- முஸ்லிம்கள் தங்கள் அயலவர் முஸ்லிமாக இருந்தாலும் முஸ்லிமல்லாதவராக இருந்தாலும் அவரைத் துன்புறுத்தக் கூடாது என்று அவர்கள் முஸ்லிம்களுக்குக் கற்பித்தார்கள்.

- ஒரு முஸ்லிம் தனது பெற்றோரிடம் நல்லமுறையில் நடந்து கொள்ளவும், அவர்களுக்குச் சேவை செய்யவும் கற்றுக் கொடுத்தார்கள். அவர்கள் மாற்று மதத்தில் இருந்தாலும் சரியே.

- குழந்தைகள், பெண்கள், பலவீனமானவர்கள், முதியவர்கள் ஆகியோரிடம் இரக்கம் காட்ட முஸ்லிம்களுக்குக் கற்றுக் கொடுத்தார்கள்.

## முஹம்மது நபி ﷺ யார், அவர்கள் நமக்கு என்ன கற்பித்தார்கள்?

- மனிதனையோ விலங்குகளையோ துன்புறுத்தக் கூடாது என்றும், சுற்றுச்சூழலுக்கு கேடு விளைவிக்கக் கூடாது என்றும் முஸ்லிம்களுக்கு போதித்தார்கள்.

- முஸ்லிம்கள் தங்கள் வாழ்க்கையின் கடைசி நாள் வரை தங்கள் மனைவிகளை நேசிக்கவும், தங்கள் குழந்தைகளை கவனித்துக்கொள்ளவும், அவர்களிடம் கருணை காட்டவும் அவர்கள் கற்றுக் கொடுத்தார்கள்.

- குழந்தைகள் வயது வந்த பிறகும் பெற்றோர்கள் அவர்களுடனான உறவை ஒருபோதும் கைவிடக்கூடாது என்று அவர்கள் முஸ்லிம்களுக்குக் கற்பித்தார்கள்.

- ஒவ்வொரு முஸ்லிமும் முஹம்மத் ﷺ அவர்களை எல்லா படைப்புகளை விடவும் நேசிக்கிறான்.

## முஹம்மது நபி ﷺ யார், அவர்கள் நமக்கு என்ன கற்பித்தார்கள்?

- அவர்களைப் பற்றிய நற்செய்தியை மூஸா (மோசஸ்), ஈஸா (இயேசு) -அலைஹிமஸ்ஸலாம்- ஆகிய நபிமார்களும் முன்னறிவிப்புச் செய்தார்கள்.

- ஒவ்வொரு முஸ்லிமும் மோசஸ் மற்றும் இயேசுவை நேசிக்கிறார்கள் -அவர்கள் மீது சாந்தி உண்டாகட்டும்- மேலும் அவ்விருவரும் நபிமார்களில் மிகச் சிறந்தவர்களில் உள்ளவர்கள் என்றும் நம்புகிறார்கள், -அவர்கள் அனைவருக்கும் சாந்தி உண்டாகட்டும்-.

- முஹம்மத் ﷺ அவர்கள் அரேபியர்களுக்கும் அரேபியர்கள் அல்லாதவர்களுக்கும் நபியாக அனுப்பப்பட்டார்கள்.

- அவர்கள் போதித்த மார்க்கத்தில் அரேபியர்களுக்கும் அரேபியர் அல்லாதவர்களுக்கும் இடையே இறையச்சத்தைக் கொண்டே தவிர வேறு எந்த வேற்றுமையும் இல்லை.

## முஹம்மது நபி ﷺ யார், அவர்கள் நமக்கு என்ன கற்பித்தார்கள்?

- நிச்சயமாக, அவர்கள் தான் அல்லாஹ்வின் தூதர் முஹம்மது ﷺ .

- எல்லா முஸ்லிம்களும் முஹம்மத் ﷺ அவர்களை ஏன் நேசிக்கிறார்கள் என்று உங்களுக்குப் புரிகிறதா?

- இஸ்லாமியர்களிடம் முஹம்மது □ என்பவர்கள் எந்த அளவு மதிப்புள்ளவர்கள்  என்பது இப்போது உங்களுக்குப் புரிகிறதா?

இஸ்லாமியர்களிடம் முஹம்மது □ என்பவர்கள் எந்த அளவு மதிப்புள்ளவர்கள்  என்பது இப்போது உங்களுக்குப் புரிகிறதா?

ஸுன்னஹ் கல்வியகம்

sarhaan.com

ஷெய்க் அவர்களின் இணையதளம்

mahadsunnah.com